பத்திரிகை செய்தி

கேரளா மாநிலத்தில் ஜிக்கா வைரஸ் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் குறித்த காணொளி கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் காணொளி கூட்டத்தில் மாநகராட்சி ஆணையர், மாவட்ட வருவாய் அலுவலர், நகராட்சி நிர்வாக ஆணையர், திட்ட இயக்குனர் (ஊரக வளர்ச்சி), இணை இயக்குனர் (சுகாதாரம்), துணை இயக்குனர் (சுகாதாரம்) , துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் மருத்துவர்கள் கலந்து கொண்டனர். சுகாதாரத்துறை சார்பாக ஜிக்கா குறித்த விளக்கவுரை வழங்கப்பட்டது. இந்த ஜிக்கா வைரஸ் நோயானது டெங்குவை பரப்பும் ஏடீஸ் வகை கொசுக்கள் மூலம் பரவுவதால், டெங்கு காலத்தில் மேற்கொண்டதைப்போல கொசு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ளவும், கொசுக்களை ஒழிக்க புகை மருந்து அடிக்கும் பணிகளைத் தீவிரப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஜிக்கா தொற்றானது கர்ப்பிணி பெண்களைத் தாக்கி, அதன் மூலம் மைக்ரோகேபாலி எனப்படக்கூடிய சிறு தலையுடன் குழந்தைகள் பிறக்கும் நோயை உண்டு பண்ணக்கூடிய உடையதால் கர்ப்பிணி பெண்களுக்கு வரும் காய்ச்சல்களையும், மற்றும் பொதுவாக அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் வரும் காய்ச்சல் நோயாளிகள் குறித்த விபரங்களை சேகரிக்கவும் சுகாதாரத்துறைக்கு அறிவுறுத்தப்பட்டது.

கேரள தமிழக எல்லைகளில் உள்ள சோதனைச்சாவடிகளில் மருத்துவ முகாம்களை அமைத்து, தமிழ்நாட்டிற்கு வரும் நபர்களுக்கு காய்ச்சல் பரிசோதனை செய்யவும் வருவாய்த்துறை மற்றும் சுகாதாரத்துறை

அதிகாரிகளுக்கு அறிவுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட அனைத்து நடவடிக்கைகளை போர்க்கால வேகத்தில் செயல்படுத்திடவும் இது தொடர்பான அறிக்கைகளை தினசரி மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பிக்க துறைத்தலைவர்களுக்குப் பணிக்கப்பட்டது.

மேலும் ஜிக்கா வைரஸ் நோய்த்தடுப்பு பணிகளுக்கு மாவட்ட நிர்வாகம் எடுக்கும் முயற்சிகளுக்கு பொதுமக்கள் அனைவரும் போதிய ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.